# தமிழாய்வுச் சங்கமம்

# TAMILAIVU SANGAMAM

**Special Issue** — **September - 2018**



## தமிழ் இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்

வட்டார மக்களின் சமூக அதிகாரமாக்கல் அறக்கட்டளை

**SOCIAL EMPOWERMENT OF LOCAL PEOPLE TRUST**

www.selptrust.org

ISSN 2320-3412

# தமிழாய்வுச் சங்கமம்

(பன்னாட்டு தமிழ் இலக்கிய ஆய்விதழ் - ISSN : 2320 – 3412)

# TAMILAIVU SANGAMAM

(An International Research Journal on Tamil Language)

**நிர்வாக ஆசிரியர்**

**ஆ.முத்துத்தமிழரசி**

**ஆசிரியர் ஆலோசனைக்குழு**

**முனைவர்.ச.இராமமூர்த்தி**
இணைப்பேராசிரியர்,
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி,
சிவகங்கை.

**முனைவர்.இரா.பூங்குழலி**
துறைத்தலைவர்,
தமிழ் ஆய்வியல் துறை,
மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி,
பூவந்தி.

**முனைவர்.ச.கலைவாணி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் ஆய்வியல் துறை,
மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி,
பூவந்தி.

**முனைவர்.பா.நாக ஜோதி**
முதுகலை தமிழ்த்துறைத்தலைவர்,
வே.வ.வன்னியப்பெருமாள் மகளிர் கல்லூரி,
விருதுநகர்.

**திருமதி.பா.கார்த்திகைச்செல்வி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் ஆய்வியல் துறை,
மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி,
பூவந்தி.

**திருமதி.பி. சீத்தாலெட்சுமி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் ஆய்வியல் துறை,
மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி,
பூவந்தி.

**முனைவர்.ம.மணிமேகலா**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் ஆய்வியல் துறை,
மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர்
மீனாட்சி பெண்கள் கல்லூரி,
பூவந்தி.

தொடர்பு முகவரி

**நிர்வாக ஆசிரியர்**

472.நெடுஞ்செழியன் சாலை.கே.கே.நகர், திருச்சிராப்பள்ளி – 620 021

tamilselp@yahoo.in. Mobile: 9486055997

| | | |
|---|---|---|
| 50 | **நாகஜோதி. பா**<br>புறநானூறு தரும் பொருளாதாரப் பாடம் | 129 |
| 51 | **நித்யா. ரா**<br>அகநானூற்றில் வாணிகம் | 132 |
| 52 | **நிவேதிதா. ப**<br>பாண்டியன் பரிசில் பொருளியல் சிக்கல்கள் | 135 |
| 53 | **பத்ம பிரியா. மா**<br>‘மனிதவளத்தால் பொருளாதாரமேம்பாடு’ அறநூல்களை முன்னெடுத்து.... | 137 |
| 54 | **பத்மப்பிரியா. து**<br>பாவேந்தர் பாடல்களில் பொதுவுடைமை | 140 |
| 55 | **பரிமளா. தி**<br>அகநானூற்றில் பொருள்தேடலும் இல்லறக் கடமைகளும் | 142 |
| 56 | **பாக்கியலெட்சுமி. ஏ**<br>தேநீர் நாவல் நவின்றிடும் தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களின் பொருளியல் பதிவுகள் | 145 |
| 57 | **பாண்டியம்மாள். செ**<br>பொருளின்றிச் சிறக்காது இல்லறம் | 147 |
| 58 | **பாரதி. க**<br>அம்பை சிறுகதை வழி பொருளாதாரச் சிக்கல்கள் | 150 |
| 59 | **பாலாஜி. கோ**<br>வணிகத்தில் சங்க மகளிரின் பங்களிப்பு | 153 |
| 60 | **பிரதீபா. ந**<br>தமிழ் இலக்கியங்கள் சுட்டும் வறுமைநிலை | 156 |
| 61 | **பிரிகிருஷ்ணவேணி. பி**<br>அகநானூற்றில் பொருளியல் சிந்தனை | 158 |
| 62 | **பிரின்ஸ். ஜோ**<br>பழந்தமிழகத்தின் கடல்வாணிக வழிகள் | 160 |
| 63 | **பூங்குழலி. இரா**<br>பாரதியின் பொருளியல் கனவுகள் | 163 |
| 64 | **பொன்னி. பா**<br>சங்ககால அரசர்களின் பொருளியல் சிந்தனைகள் | 166 |
| 65 | **மணிமேகலா. ம**<br>சங்ககால மக்களின் பொருளீட்டல் | 169 |
| 66 | **மல்லிகா. தி**<br>‘உழவே தலை’ | 172 |
| 67 | **மாரியம்மாள் பிரதீபா. க**<br>பதிற்றுப்பத்தில் பொருளியல் சிந்தனை | 174 |
| 68 | **முத்தமிழ்ச் செல்வன். சோ**<br>சங்க இலக்கியங்கள் சுட்டும் பொருள் கோட்பாடு | 177 |
| 69 | **முத்துராஜன். ஆர்**<br>முல்லை நில மக்களின் பொருளியல் வாழ்க்கை | 180 |
| 70 | **முத்துவேல். ச**<br>அகநானூற்றில் வாணிகம் | 182 |
| 71 | **முருகன். வெ**<br>திருக்குறள் உணர்த்தும் தமிழர்களின் பொருளியற் சிந்தனை | 185 |
| 72 | **மெர்சி ஏஞ்சலா**<br>ஏலாதியில் பொருளியல் சிந்தனைகள் | 188 |
| 73 | **மேகலா. பி**<br>மூன்றாம் உலகப் போர் புதினத்தில் விவசாய மக்களின் பொருளாதார நிலை | 191 |
| 74 | **ராஜமரகதம். அ**<br>பெருங்கதையில் தொழிலாளர்கள் | 194 |
| 75 | **லதா. க**<br>சிலம்பில் தொழில்கள் | 197 |
| 76 | **லயோலா சூலியட் மேரி. பா**<br>பொருளே பிரதானம் | 199 |

ISSN 2320-3412

# ஏலாதியில் பொருளியல் சிந்தனைகள்

முனைவர் மெர்சி ஏஞ்சலா
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை

## முன்னுரை

மனிதனின் அகஇருளை அகற்றி ஒளியேற்றும் படைப்புகளைப் படைப்பதில் புலவர்கள் முனைந்தனர். மனிதன் தான் ஈட்டும் பொருளைப் பயனுள்ள வகையில் செலவிடும் வழிமுறைகள் மற்றும் அக்கொடைப்பண்பு அவனை ஈடேற்றும் வழிமுறைகள் போன்றவற்றை அருமுணர்ந்த சான்றோர் பெருமக்கள் நமக்கு இலக்கியங்கள் வாயிலாகப் படைத்துச் சென்றனர். அப்படைப்புகளில் ஒன்று ஏலாதி எனும் அறநூலாகும். இதிலிடம் பெறும் பொருளியல் சிந்தனைகளை இக்கட்டுரை ஆய்கிறது.

## பொருள் - விளக்கம்

அருட்செல்வம், பொருட்செல்வம் எனும் இரண்டு செல்வங்களுள் பொருளியல் என்பது பொருட்செல்வத்தைக் குறிப்பிடுகின்றது. பொருளில்லார்க்கு இவ்வுலமில்லை, எனும் வள்ளுவர் வாக்கு இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. நமது அன்றாட தேவைகளுக்கும், நமது எதிர்காலத்திற்கும், சந்ததிகளுக்கும், தானத்திற்கும் பொருளீட்ட வேண்டுமென்ற எண்ணம் இயல்பாகவே மனிதரிடத்தில் காணப்படுகின்றது. சிலர் அதில் உறுதியுடனும் முனைப்புடனும் செயல்படுவதனால் வெற்றிக் கனிகளை எட்ட இயலுகின்றது. வாழ்வும் தாழ்வும் மனிதனின் முயற்சியினால் உண்டாவதேயாகும். முயற்சி திருவினையாக்கும்' என்ற வாய்மொழி பொருளீட்டுதலின் தாரக மந்திரமாகும்.

## பொருளின் மீது பற்று

காலையில் துயிலெழுந்து நாம் செய்யும் ஒவ்வொரு பணிகளிலும் பொருளின் தேவை உணரப்படுகிறது. இதற்கு செல்வமனநிலை அவசியமாகிறது. ஆங்கிலத்தில் இதனை "றநயடவா உழளெஉழைரளநௌள" என்று கூறுவர். இம்மனநிலை நமக்குத் தேவைப்படும் பணத்தை நோக்கி நம்மை இழுத்துச் செல்லும். அமெரிக்காவின் ஹென்றி ∴போர்டு குறைந்த பணத்திற்குக் கார் விற்பனை செய்தவர். மிகச் செல்வந்தனாக விளங்கிய அவரின் செல்வ மனநிலைதான் அவருடைய உயர்ச்சிக்குக் காரணமாக அமைந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இம்மனநிலை அவரோடு சேர்ந்து பழகுகின்றவர்களையும் தொற்றிக் கொள்ளும் தன்மையுடையது.

## விருந்தினரை உபசரித்தல்

தமிழர்களின் மேலான பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். செல்வ மனநிலை உள்ளவர்களிடம் இப்பண்பு மேலோங்கிக் காணப்படுகிறது. விருந்தினரை உபசரிக்க நல்ல மனம் வேண்டுமாயினும் அதற்குரிய பொருளின்றி அதனை நிறைவேற்ற இயலாது. அவ்வாறு உபசரிக்கும் முறையினை,

**"இன்சொ லளாவ லிடமினிதூண் யாவர்க்கும்**
**வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்**
**முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்**
**விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து"**
**(ஏலாதி-6)**

என்ற பாடல்மூலம் உணர்த்துகின்றார் கணிமேதையார். தனது இல்லம் நாடிவரும் விருந்தினரிடம் இன்சொல் கூறி, கலந்துரையாடி, இருக்கையில் அமரச் செய்து, அறுசுவை உணவை அளித்து, மென்மையான சொற்களைப் பேசி உபசரிப்பவர்களை வானோர் விருந்தினராய் ஏற்றுக் கொள்வர் என்கிறார். திருவள்ளுவரும்,

**"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**
**(குறள்-81)**

என்கிறார். மக்கள் இல்லறத்தின் மேலான பண்பாக விருந்தோம்பலை மேற்கொள்ள வேண்டுமென்கிறார். எனவே ஏலாதி கற்றுத் தரும் நெறியினைக் கடைப்பிடிக்கும் பொழுது இவ்வுலக இன்பம் மட்டுமல்லாது மறு உலக செல்வமும் நமக்குக் கைமாறாகக் கிடைக்கும்.

## தற்புகழ்ச்சியின்மையும் ஈகையும்

எத்தகைய எதிர்பார்ப்புமின்றி இயலாதவர்களுக்குக் கொடுப்பதே ஈகையாகும். ஈகைப் பண்புடையவர்கள் தேவர்களாக உயரும் நன்மை கிடைக்கும் என்று ஏலாதி கூறுகிறது.

**"உரையான் குலன் குடிமை யூனம் பிறரை**
**உரையான் பொருளொடு வாழ் வாயு –**
**உரையானரய்ப்**
**பூவாகி வண்டு தேர்ந் துண்குழலா யீத்துண்பான்**
**தேவரி தேவனாத் தேறு"**
**(ஏலாதி -31)**

ஒருவன் தனது குலம், குடிப்பிறப்பு போன்றவற்றின் உயர்வைப் பாராட்டிக் கொள்ளாமல், இவ்வுயர்வில்லாத மற்றவரைக் குற்றம் சொல்லாமல்